தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 11 மாவட்டங்களில் ரூ.50 கோடியில் நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகள்



**சென்னை,**

நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகளை தலைமைச் செயலகத்தில் இருந்து விடியோ கான்ஃபரன்சிங் மூலம் திறந்து வைக்கிறார் முதல்வர் ஜெயலலிதா. உடன் (இடமிருந்து) தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன், வீட்டுவசதித் துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம், நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம்.

தருமபுரி, திருவள்ளூர் உள்பட 11 மாவட்டங்களில் ரூ.49.99 கோடியில் நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகளை முதல்வர் ஜெயலலிதா கடந்த 12 ஆம் தேதியன்று திறந்து வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

தருமபுரி மாவட்டத்தில் மத்தளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே புதிய ஏரி அமைக்கும் திட்டத்துக்கு முதல்வர் ஜெயலலிதா கடந்த 2005 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டினார். 700 ஏக்கர் நிலப்பரப்புக்கு நேரடி முதல் போக பாசனமும், 400 ஏக்கர்

நிலப்பரப்புக்கு இரண்டாம் போக பாசன வசதியும் பெறும் வகையில் அந்த ஏரி ரூ.14.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் இருளிப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே ரூ.6.20 கோடி மதிப்பில் அணை கட்டப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் சித்தாத்தூர் கிராமம் அருகில் பாலாற்று பகுதியில் செல்லும் மோர்தானா வலதுபுறக் கால்வாய் பகுதி வெள்ளத்தால் சேதமடைந்துள்ளது. இது சீரமைக்கப்பட்டு, அந்தப் பகுதியில் கிணற்றுடன் கூடிய உள்வாங்கி மேலேற்றும் காய்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், 20 கிராமங்களில் குடிநீர் வசதி மேம்படும்; 207 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

கடலூர் மாவட்டத்தில் கீழப்பாலையூர், மருங்கூர், தேவங்குடி, காவனூர், பவழங்குடி ஆகிய வறண்ட பகுதிகளில் குடிநீர் வசதியை மேம்படுத்த ரூ.5.50 கோடி மதிப்பில் படுகை அணை கட்டப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டம் சாத்தூர் வட்டத்தில் வைப்பாற்றின் குறுக்கே ரூ.5.90 கோடியில் தடுப்பணையும், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டத்தில் வைகை ஆற்றின் குறுக்கே ரூ.12.85 கோடியில் படுகை அணையும் கட்டப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம் ஓரத்தூர் கிராமத்தில் பாமணி ஆற்றின் குறுக்கே 770 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் தளமட்டச் சுவர் கட்டப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலத்தில் கூழையார் வடிகாலின் குறுக்கே ரூ.22 லட்சத்தில் சீராக்கி (ரெகுலேட்டர்) அமைக்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் குண்டாற்றின் குறுக்கே ரூ.49 லட்சத்திலும், தஞ்சை மாவட்டம் வீரசோழன் ஆற்றின் குறுக்கே ரூ.99 லட்சத்திலும், கோவை மாவட்டம் வரட்டாற்றின் குறுக்கே ரூ.80 லட்சத்திலும், ஈரோடு மாவட்டம் சித்தாற்றின் குறுக்கே ரூ.54 லட்சத்திலும் தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டம் கிழக்கு வட்டத்தில் பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் ரூ.50 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு ஆய்வகம், உள்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. பொதுப்பணித் துறையில் மொத்தமாக ரூ.49.99 கோடி

மதிப்பில் பாசன உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கட்டடங்களை முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

**வாழை இலை விலை உயர்வு:உணவகங்களில் கெமிக்கல் பேப்பர் இலை ஆண்டிபட்டி,**

தேனி மாவட்டத்தில் வாழை இலை வரத்து குறைந்து, கடுமையான விலை உயர்வால், உணவகங்களில் தரமற்ற ரசாயனம் தடவிய காகித இலைகளில் உணவு பரிமாறப்படுகிறது.

தேனி மாவட்டத்தில் நெல், வாழை, வெங்காயம், கரும்பு ஆகிய பயிர்கள் அதிக அளவு பயிரிடப்படுகிறது. பெரியகுளம் மற்றும் ஆண்டிபட்டி பகுதியில் அணைக்கரைப்பட்டி, குள்ளப்புரம் ஆகிய பகுதிகளில் இலைக்காக வாழை சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த 2 ஆண்டுகளாக இப்பகுதியில் போதிய மழை இல்லாததால், வாழை சாகுபடி பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. இதனால், இலை வரத்து குறைந்துள்ளது.

எனவே, கடந்த மாதம் 6 வாழை இலை கொண்ட கட்டு ரூ. 5 முதல் 10 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால், கடந்த 10 நாள்களாக ரூ. 40 முதல் ரூ. 50 வரை விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது கட்டுபடியாகாததால், பெரும்பாலான உணவகங்களில் வாழை இலை போன்று ரசாயனம் தடவப்பட்ட காகித இலையில் உணவுகள் பரிமாறப்படுகின்றன. இதே நிலை நீடித்தால், 10 ஆண்டுகள் கழித்து வாழை இலைகளில் உணவு பரிமாறுவது என்பது அதிசயமாகிவிடும். இது குறித்து, வாழை இலை வியாபாரி கோவிந்தன் கூறுகையில், மழை பெய்யாததால், வாழை

இலை வரத்து குறைந்துள்ளது. கடந்தாண்டு 300 கட்டுகள் வரை ஆண்டிபட்டி, பெரியகுளம் கமிஷன் கடைகளுக்கு வரத்து இருந்தது. ஆனால், தற்போது 30 முதல் 50 கட்டுகள் வரையே வரத்து உள்ளது. இதனால், விலை உயர்ந்துள்ளது. பெரும்பாலான உணவகங்களில் காகித இலையை பயன்படுத்துகின்றனர் என்றார்.

**நெல் சாகுபடி செயல் விளக்க முகாம்**

**காரியாபட்டி,**

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகேயுள்ள தொப்பலாக்கரை கிராமத்தில் திருந்திய நெல்சாகுபடி பண்ணைப்பள்ளி மற்றும் செயல்விளக்கப் பயிற்சி நடைபெற்றது. வேளாண்துறையின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண்மை உதவி இயக்குனர் நாச்சியார் அம்மாள் திருந்திய நெல்சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும் நீர் மறைய நீர் கட்டுதல் மூலம் நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவது பற்றியும் எடுத்துக் கூறினார். வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் ராஜேந்திரன் திருந்திய நெல்சாகுபடியில் பூச்சி நிர்வாகம் பற்றி விளக்கினார்.

**காரியாபட்டி பகுதியில் நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டப் பணிகள் ஆய்வு**

**காரியாபட்டி,**

விருதுநகர் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையால் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம், 7 ஒன்றியங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 111 நீர் வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் காரியாபட்டி ஒன்றியம், மந்திர ஓடை நீர்வடிப்பகுதியில் செயல்படுத்தப்பட்டுள்ள நிலமேம்பாடு, வரப்பு அமைத்தல், தடுப்பணை கட்டுதல், ஊருணி அமைத்தல், வரத்துக்கால்வாய் தூர்வாருதல், பழத்தோட்டம் அமைத்தல்

ஆகிய பணிகளை தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை செயல் இயக்குனர் சுரேஷ்குமார் ஆய்வு செய்தார்.

இத்திட்டப் பணிகள் செயலாக்கத்துக்கான மந்திரி ஓடை நீர்வடிப்பகுதி கணக்கேடுகள், பதிவேடுகள் மற்றும் இதர ஆவணங்களை ஆய்வு செய்தார். நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளை செய்து முடித்தது மட்டுமல்லாமல் அதைத் தொடர்ந்து செய்யப்பட்ட பணிகளை முறையாக பராமரித்து அதன் மூலம் தொடர் வருவாய் ஈட்டும் வகையில் பிற அரசு துறைகளுடன் இணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அலுவலர்களிடம் அறிவுறுத்தினார். இம்மாவட்டத்தில் நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டப் பணிகள் திருப்திகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார். ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குனர் சுப்பையா, துணை இயக்குனர் பழனிசெல்வம், உதவி இயக்குனர் முருகவேல், உதவி செயற்பொறியாளர் சவுந்திரபாண்டியன், ஊராட்சித் தலைவர் கண்ணன் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

## அரிசிக்கு வரி: நெருக்கடியில் காங்கயம் அரிசி ஆலைகள்!

**காங்கயம்,**

அரிசிக்கு மத்திய அரசு வரி விதித்திருப்பதால், அதன் விலை உயரும் என அரிசி ஆலைகள் அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

காங்கயம் பகுதியில் சுமார் 150 அரிசி ஆலைகள் இயங்கி வருகின்றன. தமிழகத்தில் அதிக அளவு நவீன அரிசி ஆலைகள் காங்கயம் பகுதியில்தான் உள்ளன. இங்கு தினசரி பல நூறு டன் அரிசி உற்பத்தி செய்யபட்டு, தமிழகம் முழுவதும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இந்த அரிசி ஆலைகளில் சுமார் 50 ஆயிரம் ஊழியர்கள் பல்வேறு மாவட்டத்தில் இருந்தும், பிகார், ஒடிசா போன்ற வெளி மாநிலங்களில் இருந்தும் காங்கயம் பகுதியில் தங்கிப் பணியாற்றுகின்றனர்.

இந் நிலையில், மத்திய அரசு அண்மையில் அரிசிக்கு சேவை வரி விதித்துள்ளது. இதனால் அரிசி விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதுகுறித்து அரிசி

ஆலைகள் அதிபர்கள் கூறியது: ஏழை முதல் வசதியானவர்கள் வரை அரிசி உணவு சாப்பிட்டு வருகின்றனர். மத்திய அரசு இந்த அரிசிக்கு வரி விதித்து உள்ளது, அரிசி விலை உயரும் அபாயத்தை ஏற்படுத்தும்.

தற்போது தமிழகம் முழுவதும் நெல் அறுவடை நடந்து வருகிறது. இதே போல் கர்நாடகம், ஆந்திரத்திலும் நெல் அறுவடை நடந்து வருகிறது. இதனால் அரிசி விலை குறைய வாய்ப்பு அதிகம் உள்ளது. கணிசமாக தொகை விலை குறைய இருக்கும் நிலையில், திடீரென மத்திய அரசு அரிசிக்கு வரி விதித்திருப்பதால், அரிசி விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

இந்த விலை உயர்வு, வரியின் விகிதத்துக்கேற்ப அமையும். இதனால் நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்கள் பாதிக்கப்படுவர், என்றனர்.

இதுகுறித்து மக்கள் தரப்பில் கூறியது: ஏற்கெனவே அரசி விலை விண்ணை தொட்டு விட்டது. பெரிய மூட்டையில் அரிசி வாங்கி சாப்பிடும் சக்தி இல்லாமல், நாங்கள் 25 கிலோ கொண்ட சிறிய அரிசிப் பையைத்தான் வாங்கிப் பயன்படுத்துகிறோம்.

நிலைமை இவ்வாறு இருக்க மத்திய அரசு அரிசிக்கு வரி விதித்து இருப்பது அதிர்ச்சியாக இருக்கிறது. எனவே, மத்திய அரசு உடனடியாக இந்த வரி விதிப்பை ரத்து செய்ய வேண்டும் என்றனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.91 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 42.91 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 591 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 750 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.95 டிஎம்சி.

## நீலகிரி: பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.13.10 நிர்ணயம்

**உதகை,**

நீலகிரி மாவட்டத்தில் பிப்ரவரி மாதத்திற்கு பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.13.10 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

உதகையில் நீலகிரி மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தலைமையில் பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்வது தொடர்பான மாவட்ட அளவிலான கூட்டம் தேயிலை வாரியத்தின் செயல் இயக்குநர் அம்பலவாணன் முன்னிலையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிப்ரவரி மாதத்திற்கு பசுந்தேயிலைக்கான குறைந்தபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.13.10 வழங்குவது என நிர்ணயம் செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் தேயிலை வாரியத் துணை இயக்குநர் சி.எஸ்.ஹரிபிரசாத், இன்கோசர்வ் இணை இயக்குநர் கே.சாமிநாதன், உணவு பாதுகாப்பு அலுவலர் டாக்டர் ரவி, இன்கோசர்வ் உறுப்பினர்கள்

ரமேஷ் போஜராஜன், எம்.ஜோகி, கே.சகாதேவன், கே.அப்பாஸ்

உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## பயிர் அறுவடை பரிசோதனை: இணை இயக்குநர் ஆய்வு

**செய்யாறு,**

செய்யாறு வட்டாரத்தில் நடைபெற்று வரும் பயிர் அறுவடை பரிசோதனையை மாவட்ட இணை இயக்குநர் ந.பன்னீர்செல்வம் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார்.

நாட்டின் உணவு உற்பத்தி, வேளாண்மை உற்பத்தித் திறன் ஆகியவற்றைக் கணிப்பதற்கு பயிர் மதிப்பீட்டாய்வுப் பணிகள் கணக்கிடப்பட்டு பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்திய அரசின் புள்ளியியல் துறை மற்றும் வேளாண்மைத் துறை இணைந்து கணக்கெடுப்புப் பணியை மேற்கொண்டுள்ளன.

அதன்படி, செய்யாறை அடுத்த முக்கூர் கிராமத்தில் விவசாயி ரமேஷ் என்பவர் நெல் வயலில் பயிரிட்டு இருந்த ஏடிடீ 43 நெல் ரகத்தின் பயிர் அறுவடை பரிசோதனை கணக்கிடப்பட்டது.

இதற்கான ஆய்வுப் பணியை திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ந.பன்னீர்செல்வம் மேற்கொண்டார்.

25 சதுர மீட்டர் பரப்பளவில் பயிர் அறுவடை செய்ததில் 16.500 கிலோ தானியம், 34 கிலோ வைக்கோல் இருந்தது தெரியவந்தது. இது ஹெக்டேருக்கு 6600 கிலோ (88 மூட்டைகள்) என்றும், இது ஒரு நல்ல மகசூல், இதே போன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள விவசாயிகள் அதிகப்படியான மகுசூலை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும், ஒவ்வொரு பருவத்தின்போதும் பயிர் வாரியாக பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, மகசூலின் அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு வருகிறது என்று விவசாயிகளிடம் மாவட்ட இணை இயக்குநர் ந.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி, துணை வேளாண்மை அலுவலர் பி.அண்ணாமலை ஆகியோர் உடனிருந்தனர்.

## ஆறுகளில் வெடிவைத்து மீன் பிடித்தால் நடவடிக்கை

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டத்தில் ஆறுகள், நீர்நிலைகளில் வெடிவைத்து மீன்பிடிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் கே.விவேகானந்தன் எச்சரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஆறுகள், நீர்நிலைகளில் சட்டத்துக்குப் புறம்பாக ரசாயனப் பொருள்கள், வெடி வைத்து மீன்கள் பிடிக்கப்படுவதாக தெரிய வருகிறது. இதனால், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதுடன், நீர்நிலைகளும் மாசுபடுகின்றன.

எனவே, ஆறுகள், நீர்நிலைகளில் வெடிவைத்து அல்லது தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பவர்கள் மீது சட்ட ரீதியாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆட்சியர்.

## உணவு பதப்படுத்தும் தொழிலில் இணைந்து செயல்பட்டால் வெற்றி பெறலாம்' தஞ்சாவூர்,

உணவு பதப்படுத்தும் தொழிலில் அனைவரும் இணைந்து செயல்பட்டால் வெற்றி பெறலாம் என்றார் ஆட்சியர் என். சுப்பையன்.

தஞ்சாவூரில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற உணவு பதப்படுத்துதல் விழிப்புணர்வு கருத்தரங்கத்தில் அவர் மேலும் பேசியது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் உணவு பதப்படுத்தும் தொழிலில் ஒரு சிலர் மட்டுமே ஈடுபடுகின்றனர். இத்தொழில் வளர்ச்சியடைய வேளாண்மை, பொறியியல் துறைகள், இந்திய பயிர் பதன தொழில்நுட்ப மையம் போன்றவை முயற்சி மேற்கொள்ள வேண்டும். மேலும், விழிப்புணர்வு நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

இந்தத் துறையில் வெற்றி பெற்றவர்கள் செயல்முறை விளக்கங்களையும் செய்து காட்ட வேண்டும். பதப்படுத்தும் தொழிலில் சந்தை வாய்ப்புகள் குறிப்பாக தேசிய அளவில் சந்தைப்படுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

உணவு பதப்படுத்தும் தொழிலில் மிகவும் நுணுக்கமாகத் தனித்தனியான காய்கறிகளை, பழங்களை எவ்வாறு பதப்படுத்தலாம். குறிப்பாக, நமது

மாவட்டத்தில் உற்பத்தியாகும் பொருட்களை எவ்வாறு இந்த தொழிலில் கையாளலாம் என்பதை கருத்தரங்கம் மூலம் தெளிவுபடுத்த வேண்டும்.

இதற்கான ஆண்டுத் திட்டங்களைச் சம்பந்தப்பட்ட துறைகள் தயார் செய்ய வேண்டும். ஒவ்வொரு துறைகளும் இது போன்ற தொழில்களில் என்னென்ன திட்டங்கள் உள்ளன என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்.

நெல் சாகுபடி போக அடுத்த கட்டமாக பருவ நிலைக்கு எதிரான சூழ்நிலைகளை எவ்வாறு சமாளித்து பயிர்களைக் காப்பாற்றலாம் என்ற தொழில்நுட்பங்களையும் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். தொழில்நுட்பங்கள் குறித்து தொழில் முனைவோர்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். உணவு பதப்படுத்தும் தொழிலில் நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டால், வெற்றி பெறலாம் என்றார் சுப்பையன்.

வேளாண் துறை இணை இயக்குநர் ஜெ.சேகர், துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ஆர். கலியராஜ், மாவட்ட தொழில் மையப் பொது மேலாளர் எம். பாண்டியன், முன்னோடி வங்கி மேலாளர் என். கஜேந்திரநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நெல் கொள்முதல் செய்ய ரூ. 2 கோடி

**காரைக்கால்,**

காரைக்காலில் நெல் கொள்முதல் செய்வதற்காக புதுவை அரசு சார்பில் ரூ. 2 கோடிக்கான காசோலையை கூட்டுறவு சங்க நிர்வாகியிடம் வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு வியாழக்கிழமை வழங்கினார்.

காரைக்காலில் சம்பா, தாளடி அறுவடைப் பணி ஏறக்குறைய முடிந்துள்ள நிலையில், புதுச்சேரி அரசு நெல் கொள்முதல் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என விவசாயிகள், அரசியல் கட்சியினர் புகார் கூறி வந்தனர்.

இந்நிலையில், காரைக்காலில் நெல் கொள்முதல் செய்ய புதுச்சேரி அரசு ரூ. 2 கோடியை ஒதுக்கியது. இதற்கான காசோலையை காரைக்கால் மத்திய கூட்டுறவு

விற்பனை மற்றும் விநியோகச் சங்க (மார்க்கெட்டிங் சொசைட்டி) மேலாண் இயக்குநர் எல். மோகனிடம் வியாழக்கிழமை புதுச்சேரி வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு வழங்கினார். நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியது:

காரைக்காலில் கூட்டுறவு நிறுவனங்களால் நெல் கொள்முதல் செய்யப்படாததால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து நானும், காரைக்கால் மாவட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களும் முதல்வர் ரங்கசாமியிடம் விளக்கினோம். அவரும் ரூ. 2 கோடி நிதியை ஒதுக்கித் தந்தார்., விவசாயிகளுக்கு மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அதனை புதுச்சேரி அரசு செய்யும் என்றார்.நிகழ்ச்சியில் காரைக்கால் விற்பனைக் குழுத் தலைவர் கே.ஆர். உதயக்குமார், வேளாண்துறை இயக்குநர் ராமமூர்த்தி, கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

காலதாமதமான நடவடிக்கை: காரைக்காலில் சுமார் 20 ஆயிரம் டன் நெல் உற்பத்தியாகியுள்ளது. அறுவடைப் பணி கடந்த 45 நாள்களாக நடைபெற்று வருகிறது.

ஏறக்குறைய 60 சதவீத நெல், தனியாரால் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்டுவிட்டது. இப்போதுகூட அளித்துள்ள ரூ. 2 கோடி வெறும் 1500 டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்ய முடியும். இதை கண் துடைப்பாகவே கருத வேண்டியுள்ளது.

வரும் ஆண்டுகளில் பட்ஜெட் தாக்கல் செய்யும் போதே நெல் கொள்முதலுக்கென தனியாக நிதி ஒதுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**மானிய விலையில் உரங்கள் பெறலாம்**

**திருவாரூர்,**

விவசாயிகள் மானிய விலையில் உரம் பெற்று பயிறு வகை பயிர்களை சாகுபடி செய்து பயன் பெறலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.மன்னார்குடி

ஒன்றியம், வேளுக்குடியில் வியாழக்கிழமை பயிர் சாகுபடி மற்றும் திரவ உயிர் உரங்கள் குறித்த கருத்தரங்கில் அவர் பேசியது:

விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தற்போது நெல் பயிர் சாகுபடி செய்த வயல்களில் உளுந்து, பாசிப் பயிறு பயிரிடப்படுகிறது. தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை விதைத் திட்டம் ஆகியவற்றின் கீழ் உளுந்து, பாசிப் பயிறு 3,000 ஏக்கர் பயிர் சாகு

படி செய்ய விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 200 மானியத்தில் டிஏபி வழங்க உள்ளது.வேளுக்குடி பகுதியில் பயிறு வகை பயிர் செய்ய நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் மையத்தின் பூம்ஸ்ப்ரே கருவி வேளாண்துறையின் மூலம் கட்டணமின்றி வழங்கப்படும். இக் கருவியை கொண்டு நீர் மேலாண்மை மற்றும் உரக் கரைசலை எளிதாக தெளிக்க முடியும். மேலும் பயிறு வகை பயிரை பயிர் செய்வதன் மூலம் நிலத்துக்கு நைட்ரஜன் சத்து அதிக அளவில் கிடைக்கும் என்றார் நடராசன்.

கருத்தரங்கில் இணை இயக்குநர் வேளாண்மை தனசேகரன், துணை இயக்குநர் க. மயில்வாகனன், கூட்டுறவு சங்க துணைப் பதிவாளர் சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விளாத்திகுளத்தில் தடுப்பணைக்கு பூமி பூஜை**

**விளாத்திகுளம்,**

விளாத்திகுளம் தொகுதிக்குள்பட்ட வி.வேடபட்டி மற்றும் நம்பிபுரம் கிராமங்களில் வைப்பாற்றின் குறுக்கே ரூ. 19 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள தடுப்பணை கட்டுமானப் பணிகளுக்கான பூமிபூஜை நடைபெற்றது.

விளாத்திகுளம் தொகுதியில் வைப்பாற்றின் வழித்தடத்தில் கடந்து செல்லும் மழை நீர் மற்றும் வெள்ளநீர் வீணாக கடலில் கலப்பதைத் தடுக்கும் வகையில், வி.வேடபட்டி கிராமத்தில் வைப்பாற்றின் குறுக்கே 450 மீ., அகலத்தில் ரூ. 11.09

கோடி மதிப்பீட்டில் தடுப்பணையும், நம்பிபுரம் கிராமத்தில் 350 மீ., அகலத்தில் ரூ. 7.96 கோடி மதிப்பீட்டில் தடுப்பணையும் கட்டப்படவுள்ளது. வைப்பாற்றின் குறுக்கே ரூ. 19 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள தடுப்பணைக்கான பூமிபூஜை விழாவுக்கு மாவட்ட ஊராட்சித் தலைவர் (பொ) தெய்வேந்திரன் தலைமை வகித்தார். விளாத்திகுளம் ஊராட்சித் தலைவர் உமாமகேஷ்வரி ரகுபதி முன்னிலை வகித்தார். விளாத்திகுளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் பூமிபூஜையில் பங்கேற்று தடுப்பணைக்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இதில், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் கலியமூர்த்தி, துணை செயற்பொறியாளர் கணேசன், உதவி பொறியாளர் பாலமுருகன், நம்பிபுரம் ஊராட்சித் தலைவர் பாலமுருகன், வி.வேடபட்டி ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி மாரியப்பன், மாவட்ட கவுன்சிலர் தங்கமாரியம்மாள் மற்றும் அதிமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பச்சை மிளகாயில் முதலிடம்; பாகற்காயில் இரண்டாமிடம்: விளைச்சலில் தேனி விவசாயிகள் சாதனை

**தேனி:** தேனி மாவட்டம், பச்சை மிளகாய் விளைச்சலில், தமிழகத்தில் முதலிடத்தையும், பாகற்காய் விளைச்சலில், இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

தேனி மாவட்டத்தில், 400 எக்டேரில் வீரிய ரக பச்சை மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடவு செய்யப்பட்ட 3 வது முதல், 11வது மாதம் வரை, தொடர்ந்து விளைச்சல் இருக்கிறது. ஒரு எக்டேரில், அதிகபட்சம் 50 டன் பச்சை மிளகாய் கிடைக்கிறது. மாநில அளவில் பச்சை மிளகாய் விளைச்சலில், தமிழக

அளவில் தேனி மாவட்டம், முதலிடம் பெற்றுள்ளது. அதேபோல், வீரிய ரக பாகற்காயும் அதிகளவு விளைவிக்கப்படுகிறது. ஒரு எக்டேரில் அதிகபட்சம் 65 டன் விளைச்சல் கிடைக்கிறது. பாகற்காயிலும், 3 வது முதல் 11வது மாதம் வரை, தொடர்ந்து விளைச்சல் எடுக்கப்படுகிறது. அதிகளவு பாகற்காய் விளைவிக்கும், மாவட்டங்களில் கோவை முதலிடத்தையும், தேனி 2 ம் இடத்தையும் பெற்றுள்ளது. தேனி மாவட்டத்தில், வீரிய ஒட்டு ரகங்கள் சாகுபடி செய்து, முறையான சொட்டுநீர்ப் பாசனத்தில், உரங்களை பிரித்து வழங்கி, நேர்த்தியான உர நிர்வாகம் செய்வதால், பூக்கள் கொட்டுவதில்லை. இதனால் கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

**தமிழக நிலத்தடி நீர்மட்டம் முற்றிலும் குறைந்தது**

தமிழகத்தில், 10 மாவட்டங்களில், நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்துள்ள நிலையில், 22 மாவட்டங்களில் குறைந்துள்ளது. பொதுப்பணித் துறையின், நீர்வள ஆதார அமைப்பு பிரிவின் கீழ் உள்ள, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் சார்பில், மாதந்தோறும், தமிழக நிலத்தடி நீர்மட்டம், ஆய்வு செய்யப்படும். அதன்படி, ஜனவரி மாதம் நடந்த ஆய்வில், 22 மாவட்டங்களில், நிலத்தடி நீர்மட்டம் முற்றிலும் குறைந்துள்ளது தெரியவந்துள்ளது. அதே போல், 10 மாவட்டங்களில், அதிகரித்திருப்பதையும் கண்டறிந்து உள்ளனர்.

நிலத்தடி நீர் உயர்ந்த மாவட்டங்கள்:

ஈரோடு - 2.00 மி.மீ.,

கிருஷ்ணகிரி - 2.00 மி.மீ.,

கன்னியாகுமரி - 2.00 மி.மீ.,

தருமபுரி - 1.00 மி.மீ.,

பெரம்பலூர் - 0.88 மி.மீ.,

நிலத்தடி நீர் குறைந்த மாவட்டங்கள்:

திருவண்ணாமலை - 6.00 மி.மீ.,

தேனி - 5.00 மி.மீ.,

சிவகங்கை - 3.00 மி.மீ.,

கோவை - 2.00 மி.மீ.,
திருச்சி - 2.00 மி.மீ.,

**தென்னை விதை உற்பத்தி பண்ணை: உடுமலை அருகே 82 ஏக்கரில் அமைப்பு**

**உடுமலை**: தென்னை வளர்ச்சி வாரியத்தின் விதை உற்பத்தி மற்றும் செயல் விளக்க பண்ணை, உடுமலை அருகே அமைக்க, 82.66 ஏக்கர் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. விழாவில், வேளாண் அமைச்சர் தாமோதரன் பேசியதாவது:கேரள மாநிலம், காசர்கோடு மையத்தில், 460 வகையான தென்னை ரகங்களின் மரபணுக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய மரபணுக்கள் மூலம் புதிய ரகங்களை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்க வேண்டும். பிரான்ஸ், மலேசியா போன்ற நாடுகளில், தேங்காய்க்கான தேவை அதிகளவு உள்ளது. தமிழ்நாட்டில் ஏற்றுமதி மண்டலம் அமைக்கும் திட்டத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு, அமைச்சர் பேசினார். வேளாண்மை உற்பத்தி ஆணையர் சந்தீப்சக்சேனா, தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குனர் ஹேமச்சந்திரனிடம் 82.66 ஏக்கர் நிலத்தை ஒப்படைப்பதற்கான பத்திரத்தை வழங்கினார்.

**தென்னை மறு நடவிற்கு மானியம்: தென்னை வளர்ச்சி வாரியம் முடிவு**

**கம்பம்:** வெட்டப்படும் தென்னை மரங்களுக்கு, நஷ்ட ஈடு, மறு நடவிற்கு மானியம் வழங்க, தென்னை வளர்ச்சி வாரியம் முடிவு செய்துள்ளது.சர்வதேச அளவில், தென்னை உற்பத்தி மற்றும் சாகுபடியில், இந்தியா 26 சதவீதம் பங்கு வகிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு, கேரளாவில் இருந்து பரவிய வாடல் நோயால், தென்னையில் அதிக பாதிப்பு ஏற்பட்டது. நோய் பாதித்த மரங்களை வெட்டுவது தான் தீர்வு, என விவசாயத்துறை கூறியது. வேறு வழியின்றி, விவசாயிகளும், நோய் பாதித்த தென்னை மரங்களை வெட்டினர். வெட்டப்படும் மரம் ஒன்றிற்கு, ரூ. 250 வீதம் நஷ்ட ஈடு வழங்கப்பட்டது. சமீபத்தில் அதுவும் நிறுத்தப்பட்டது. தற்போது, தென்னை சாகுபடி பரப்பளவு குறைந்து விட்டது, மத்திய அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒரு எக்டேருக்கு, 10 ஆயிரம் கிலோ மகசூல் தரும்

ரகங்களை, தற்போது சாகுபடிசெய்து வருகின்றனர். அதிக மகசூல் தரும் ரகங்களை கண்டு பிடிக்கும் பணியில், தென்னை ஆராய்ச்சி நிலையங்கள் ஈடுபட்டுள்ளன. இதனிடையே, வெட்டப்படும் மரங்களுக்கு மீண்டும் நஷ்ட ஈடு வழங்கவும், மறுநடவிற்கு உயர் ரக கன்றுகளை வழங்கவும், மறுநடவிற்கு மானியம் வழங்கவும், தென்னை வளர்ச்சி வாரியம் முடிவு செய்துள்ளது. விரைவில் இதற்கான அறிவிப்பு வெளியாகிறது.

## நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகள் திறப்பு

**சென்னை:** தமிழகத்தில், 11 மாவட்டங்களில், பொதுப்பணித்துறை சார்பில், 50 கோடி ரூபாயில் அமைக்கப்பட்ட, நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை, முதல்வர் ஜெயலலிதா, வீடியோ கான்பரன்ஸ் மூலம் திறந்து வைத்தார். தருமபுரி, திருவள்ளூர், வேலூர், விருதாசலம், மானாமதுரை, மன்னார்குடி, துறையூர், தஞ்சை, பொள்ளாச்சி, ஈரோடு பகுதிகளில் ஆறுகளின் குறுக்கே , 50 கோடி ரூபாயில்கட்டப்பட்ட, தடுப்பணை, படுகை அணை, கலங்கல், தளமட்ட சுவர் ஆகியவற்றை, வீடியோ கான்பரன்ஸ் மூலம், முதல்வர் திறந்து வைத்தார். 201314ம் ஆண்டு, சிறந்த அணையாக, 'பரம்பிக்குளம் தூணக்கடவு மற்றும் பெருவாளிப்பள்ளம் அணை' தேர்வு செய்யப்பட்டது. இதற்கான கேடயம் மற்றும் சான்றிதழ்கள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது.நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பன்னீர்செல்வம், வைத்திலிங்கம் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

## மலை வாழை உற்பத்தி பாதிப்பு: வரத்து குறைவால் விலை உயர்வு

**தாண்டிக்குடி**: கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால், மலை வாழை உற்பத்தி பாதிக்கப்பட்டு, விலை 2 மடங்காக உயர்ந்துள்ளது.
கொடைக்கானல், தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதி, சிறுமலை ஆகிய இடங்களில் மலை வாழை விவசாயம் செய்யப்படுகிறது. துவக்கத்தில் கீழ்மலையில் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பில் இருந்த மலை வாழை சாகுபடி, தற்போது பருவ மழை பாதிப்பு, வன விலங்குகளால் சேதம், முடிக்கொத்து நோய் தாக்குதல் போன்றவற்றால்,

அழிவின் விளிம்பில் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு, உலக ரக உரிமை பெற்ற மலை வாழைக்கு போதிய முக்கியத்துவம் இல்லாததால் விவசாயிகள் பாதித்துள்ளனர். அரசும், தோட்டக்கலைத்துறையும் மலை வாழை உற்பத்தியை அதிகரிக்க எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை, என, விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். கடந்த 2 ஆண்டுகளாக நீடிக்கும் வறட்சியால், திரட்சியான காய்களின்றி வாழை உற்பத்தி சரிந்துள்ளது. தற்போது 400 காய்கள் கொண்ட பொதி, எப்போதும் இல்லாத அளவிற்கு ரூ.4800 க்கு மார்க்கெட்டில் விலை போகிறது. அதாவது காய் ஒன்று ரூ.12 என்ற விலை உள்ளது. கமிஷன் கடை உரிமையாளார் மகேந்திரன் கூறுகையில், "வாரம் ஒரு சந்தைக்கு சராசரியாக 60 ஆயிரம் காய்கள் வந்த இடத்தில், தற்போது வெறும் 10 ஆயிரம் காய்கள் மட்டுமே வரத்துள்ளது. இதன் காரணமாக ரூ.6 க்கு விற்ற காய், 2 மடங்கு விலை உயர்ந்து, ரூ.12 வரை விற்கிறது. மழையின்றி இதே நிலை நீடிக்கும் பட்சத்தில் மேலும் விலை அதிகரிக்கும்," என்றார்.

### பணவீக்கம் 5.05 சதவீதமாக குறைந்தது



**புதுடில்லி** : கடந்த ஏழு மாதங்களில் இல்லாத அளவுக்கு நாட்டின் பணவீக்கம் 5.05 சதவீதமாக குறந்தது. மொத்த விலை குறியீட்டின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் பணவீக்கம் வெளியிடப்படுகிறது. அதன்படி டிசம்பரில் 6.16 சதவீதமாக இருந்த பணவீக்கம் ஜனவரி மாதத்தில் 5.05 சதவீதமாக குறைந்தது. காய்கறிகளின் விலை குறைந்ததால் இந்த பணவீக்கம் குறைந்ததாக கூறப்படுகிறது.

ஜனவரியில் உணவு தொடர்பான பணவீக்கம் 8.8 சதவீதமாக குறைந்தது. கடந்த டிசம்பரில் இது 13.68 சதவீதமாக இருந்தது. குறிப்பாக காய்கறிகளின் விலை 57.33 சதவீதத்தில் இருந்து 16.60 சதவீதமாக குறைந்துள்ளது.

## நவீன முறையில் பயிர் சாகுபடி; விவசாயிகளுக்கு கோரிக்கை

**தர்மபுரி:** மாவட்டத்தில், விவசாய பணிகளுக்கு, ஆட்கள் கிடைக்காததால், புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, பயிர்சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டுமென, விவசாயிகளுக்கு, வேளாண்துறை அதிகாரி தெரிவித்தார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலையின் கீழ் இயங்கும் பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில், வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடந்தது. வேளாண்மை துணை இயக்குனர் வேணுகோபால் தலைமை வகித்தார். துணை இயக்குனர் வெங்கடேசன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் சுசீலா, வேளாண்மை துணை இயக்குனர் பாஸ்கள் ஆகியோர் பங்கேற்று, வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து பேசினர். அப்போது, வேளாண்மை துணை இயக்குனர் வேணுகோபால் பேசியதாவது:

தமிழம் முழுவதும் போதிய மழை இல்லாததால், ஏரி, குளம் போன்ற நீர் ஆதாரங்கள் அனைத்தும் வறண்டது. கோடை கால வறட்சியை விரட்ட வேண்டும் என்றால், தற்போது கிடைக்கும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த, விவசாய பணிகளை மேற்கொள்ள வேண்டும். சொட்டுநீர் பாசனத்திலும், விவசாயம் செய்ய விவசாயிகள் முன்வரவேண்டும்.விவசாயம் செய்ய ஆட்கள் கிடைக்காததால், புதிய தொழில்நுட்பத்தில் வேளாண் பயிர் சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வரவேண்டும், என்றார். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## குறைந்த விலைக்கு மலர் நாற்றுகள் விற்பனை

**ஊட்டி :** ஊட்டி தாவரவியல் பூங்காவில், பல வகையான மலர் நாற்றுகள் குறைந்த விலைக்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அரசு தாவரவியல் பூங்கா தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில், "சால்வியா, பென்ஸ்டீமன், டெல்பீனியம், ஸ்வீட்பீஸ், டெய்ஸி, ஸ்வீட் வில்லியம், பிளாக்ஸ், வெர்பீனா, டையான்தஸ், ஆஜீரேட்டம், சப்னேரியா, கேன்டிடப்ட், பெட்டுனியா, கொடிசியா, டையான்தஸ்மிக்ஸ், லூபின், காஸ்மாஸ், கேலண்டுலா, ஆஸ்டர், பேன்சி, சைனோகிளாசம், டேலியா, பாப்பி, பால்சம், ஜிப்சோபில்லம், சன்பிளவர், ஹெலிகிரிசம், ஜனியா, பிரன்ச் மேரிகோல்டு, லேடீஸ்லேஸ்' ஆகிய நாற்றுக்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## தேயிலையை பாதுகாக்க"ஸ்பிரிங்ளர்' தண்ணீர்

**கூடலூர்:** கூடலூர் பகுதியில் தேயிலை செடிகளை பாதுகாத்து மகசூல் பெற, "ஸ்பிரிங்ளர்' மூலம் தண்ணீர் பாய்ச்சும் பணிகள் நடந்து வருகின்றன.
கூடலூர் பகுதியில் கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் ஏற்பட்ட பனிப்பொழிவு காரணமாக, தேயிலை செடிகளின் மகசூல் பாதிக்கப்பட்டன. இதனை தொடர்ந்து தற்போது, கோடை காலம் துவங்கி உள்ளதால், வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது.தேயிலை செடிகள் காய்ந்து மகசூலும் குறைய துவங்கி உள்ளன. இதனால், பல விவசாயிகள் தங்கள் தோட்டங்களை, வறட்சியில் இருந்து பாதுகாக்க காலை, மாலை நேரத்தில் "ஸ்பிரிங்ளர்' மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இதனால், ஓரளவு பசுந்தேயிலை பாதுகாக்கப்படுகிறது.

## 23 வேளாண் பயிருக்கு காப்புரிமை வழங்க விஞ்ஞானிகள் பரிந்துரை

**பனமரத்துப்பட்டி:** சேலம் மாவட்ட விவசாயிகளின், 23 பாரம்பரிய வேளாண் பயிர் ரகங்களுக்கு, காப்புரிமை வழங்கக்கோரி, தாவர ரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்களுக்கான உரிமை சட்ட ஆணையத்துக்கு, சந்தியூர் வேளாண் விஞ்ஞானிகள் பரிந்துரை செய்துள்ளனர்.சேலம், சந்தியூர் வேளாண் அறிவியல்

நிலையத்தில், மத்திய அரசின் தாவர மற்றும் வேளாண் ரக பயிர் பாதுகாப்பு ஆணையத்தின் சார்பில், வேளாண் பயிர் பாதுகாப்பு (காப்புரிமை) மற்றும் உழவர்களுக்கான உரிமை சட்டம் குறித்து, விவசாயிகள் பங்கேற்ற விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது.

இந்தியாவில், பாரம்பரியமாக விவசாயிகள் பயிரிட்டு வரும் தாவர மற்றும் வேளாண் பயிர் ரகங்களுக்கு, மற்றவர்கள் உரிமை கொண்டாடுவதை தடுக்க, 2001ல், வேளாண் ரக பயிர் பாதுகாப்பு மற்றும் உழவர்களுக்கான உரிமை சட்டம் கொண்டு வரப்பட்டது.
உழவர்கள், பாரம்பரிய பயிர் ரகங்களை பதிவு செய்துகொள்ள வேண்டும், உழவர்களின் உரிமை சட்டம் குறித்து அறிந்துகொள்ள வேண்டும் என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மகேந்திரகுமார், விவசாயிகளுக்கு விளக்கினார்.
தாவர பயிர் பாதுகாப்பு, உழவர்களின் உரிமை சட்டத்தின் முக்கிய கொள்கைகள், செயல்பாடு, எந்த வேளாண் பயிர் ரகங்களை, ஆணையத்தில் பதிவு செய்யலாம். அதனால், உழவர்களுக்கு என்ன பயன் கிடைக்கும் என்று, முனைவர் ஸ்ரீராம் விளக்கினார்.
காப்புரிமை கோரும் விவசாயிகள், எவ்வாறு விதைகளை சேகரித்து, ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும் என, கோவை வேளாண் பல்கலைகழக முனைவர் விஜயன் விளக்கிப் பேசினார்.
உழவர்களால்தான், பாரம்பரிய பயிர் ரகங்களை பாதுகாக்க முடியும். பாரம்பரிய பயிர் ரகங்களை பாதுகாத்து, நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரித்து, உழவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவேண்டும் என, சேலம் மண்டல வன பாதுகாவலர் முனைவர் கணேசன், விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார்.
கருத்தரங்கில் பங்கேற்ற, 25க்கும் மேற்பட்ட விவசாயிகள், வெண்டை, நெல், கத்தரி, சுரக்காய், தினை, வரகு, பனிவிரகு, சாமை, அவரை, கருணை கிழங்கு, பாகற்காய், பீர்க்கன்காய், பூசணி, சீனி மிளகாய், கொள்ளு உள்ளிட்ட, 50க்கும்

மேற்பட்ட பாரம்பரிய ரகங்களை எடுத்து வந்து, அதன் பயன், சாகுபடி குறித்து எடுத்துரைத்தனர்.

சந்தியூர் வேளாண் விஞ்ஞானிகள், 23 பயிர் ரகங்களை தேர்வு செய்து, தாவர ரக பாதுகாப்பு மற்றும் உழவர்களின் உரிமை சட்ட ஆணையத்தில், பதிவு செய்ய பரிந்துரை செய்தனர்.

உழவர்கள் பயிர் ரகங்களை பதிவு செய்ய, ஆணையத்திற்கு கட்டணம் செலுத்த தேவையில்லை. அதனால், சேலம் மாவட்ட விவசாயிகள், பாரம்பரிய வேளாண் பயிர் ரகங்களை பதிவு செய்ய, சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது.

### காய்ந்த பயிரை காக்க வயல்களில் தெளிப்பான் மூலம் நீர் தெளிப்பு

**ராமநாதபுரம்**: ராமநாதபுரத்தில் போதிய மழையின்றி காய்ந்த பயிரை காக்க விளைநிலங்களில், நடமாடும் தெளிப்பான் மூலம் தண்ணீர் தெளிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் விதைப்பு செய்த, 52 ஆயிரம் எக்டேரில் பயிர் முளைத்து தூர் கட்டும் பருவத்தில் மழை பொய்த்ததால் பயிர்கள் காய்ந்து வருகின்றன. இதற்கு இளஞ்சிவப்பு பாக்டீரியா கரைசல் தெளிப்பு முறை, வேளாண் பல்கலை., விவசாய அறிவியல் நிலையம் மூலம் 10 ஒன்றியத்தில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கரைசலை மாதம் ஒரு முறை தெளிப்பதால், வறட்சியால் பயிர் விரைவில் வாடுவதை தடுக்கிறது. காய்ந்த நெற்பயிரை 15 முதல் 20 நாட்களுக்கு இக்கரைசல் பாதுகாக்கிறது. முதுனாள், நாரணமங்கலம், எருமைப்பட்டி கிராமங்களில் நெற்பயிர் தூர் கட்டி கதிர்விடும் நிலையில் உள்ளது. டேங்கர் தண்ணீரை ஒரே இடத்தில் பாய்ச்சியதால் நிறைய இடங்களுக்கு பரவாமல் வீணானது. நடமாடும் நீர்த்தெளிப்பான், "பூம் ஸ்பிரேயர்' மூலம் நெற்பயிருக்கு தண்ணீர் தெளிக்கப்பட்டு வருகிறது. முதுனாள் விவசாயி மகாதேவன்: முதுனாளில் 80 ஏக்கரில் சாகுபடி செய்த நெல் தண்ணீரின்றி வளர்ச்சி குன்றியது. விலைக்கு தண்ணீர் வாங்கி பயன்படுத்தினோம். இதனால் ஏற்பட்ட கூடுதல் செலவை குறைக்க, நடமாடும் நீர்த்தெளிப்பான் மூலம் தண்ணீர் பாய்ச்ச வேளாண் அறிவியல் நிலைய

ஆலோசனை வழங்கியது. இம்முயற்சியால் பயிரை ஓரளவுக்கு காப்பாற்றி வருகிறோம், என்றார்.

## 4 மாவட்டங்கள் பயன் பெறும் இணைப்பு கால்வாய் திட்டம்: சிவகங்கையில் விவசாயிகள் ஆய்வு

**சிவகங்கை:** சிவகங்கையில், காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் திட்டம் குறித்து ஒருங்கிணைப்புக்குழுவினர் கருத்தரங்கம்,கலந்தாய்வு கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் சிவகங்கை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, விருதுநகர் மாவட்ட விவசாய சங்கத்தினர் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர். சிவகங்கை நகராட்சி தலைவர் அர்ச்சுனன் பேசியதாவது: காவிரி,கொள்ளிடத்தில் மழை காலத்தில் ஏற்படும் உபரி நீரை தேக்கிட காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் உருவாக்கப்பட்டது. 100 ஆண்டு கால இத்திட்டத்தை நிறைவேற்ற சேதுபதி, தொண்டைமான் மன்னர்கள் முயன்றனர். இத்திட்டம் மூலம் பயன்பெறும் சிவகங்கை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, விருதுநகர் மாவட்ட விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. இப்பகுதிகளில் விவசாயம் பாதித்து, மக்கள் பிழைப்புக்காக வெளியேறுகின்றனர்.இளைஞர்கள் வெளி நாடுகளுக்கு சென்று கஷ்டப் படுகின்றனர். காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாய் ஒருங்கிணைப்பு குழு மூலம் விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தி திட்டத்தை நிறைவேற முயற்சிக்க வேண்டும்.

இதற்காக மத்திய,மாநில அரசுகளை வலியுறுத்த, அரசியல் அல்லாத இயக்கமாக விவசாயிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஒன்று சேர வேண்டும். இப்போதே, தயாரானால், 3 ஆண்டில் நிறைவேற்றலாம், என்றார்.

## வறட்சியிலும் மாவட்ட விவசாயிகள் சாதனை; அமைச்சர் பெருமிதம்

**தர்மபுரி**: ""தர்மபுரி மாவட்டத்தில், வறட்சியான காலத்தில் கூட, குறைந்தளவு நீரை பயன்படுத்தி, அதிக விளைச்சலை மாவட்ட விவசாயிகள் கொடுத்து, சாதனை படைத்துள்ளனர்," என, அமைச்சர் பழனியப்பன் தெரிவித்தார்.தர்மபுரி கலெக்டர்

அலுவலக கூடுதல் கூட்டரங்கில் , விவசாயிகளுக்கான ஒரு வார கருத்தரங்கம் நேற்று துவங்கியது. முதல் நாளான நேற்று, வேளாண்மைத்துறை சார்பாக, மக்காச்சோள சாகுபடி குறித்த சிறப்பு கருத்தரங்கம் நடந்தது. கலெக்டர் விவேகானந்தன் தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குனர் மோகன் வரவேற்றார். எம்.எல்.ஏ., அன்பழகன், மாவட்ட பஞ்சாயத்துக் குழு சேர்மன் அன்பழகன், நகராட்சி சேர்மன் சுமதி, யூனியன் சேர்மன் நிர்மலா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், உயர்கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் பேசியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், கடந்தாண்டு போதிய பருவமழை பெய்யாத போதும், குறைந்த நீரில் சிறப்பாக பயிர்வகைகளை நடவு செய்து, அதிக மகசூல் பெற்றுள்ளனர். தமிழக அளவில் நடந்த பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்று, தர்மபுரி மாவட்ட விவசாயிகள், 13 பரிசுகளை வென்றுள்ளனர்.

இது,தர்மபுரி மாவட்டத்துக்கு கிடைத்த பெருமையாகும். தர்மபுரி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி, பென்னாகரத்தில் ஒரு புளி தொழிற்சாலை மற்றும் தர்மபுரியில் பார்ம் ரோஜ் தொடர்பான தொழிற்சாலை அமைக்க, முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துள்ளார்.

மாவட்டத்தில், கால்நடைகள் வளர்ப்பவர்களின் நலன் கருதி, மானிய விலையில், வைக்கோல் விற்பனை செய்ய , 30 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார். பென்னாகரம், மொரப்பூர், செட்டிக்கரை ஆகிய, மூன்று பகுதிகளில், இக்குடோன்களில், ஒரு கிலோ, இரண்டு ரூபாய்க்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

இதற்கான, தீவன அட்டை பெற்றுள்ள கால்நடை வளர்ப்பவர்கள், இங்கு மானிய விலையில் வைக்கோல்களை வாங்கி பயன்பெறலாம், என்றார்.

தொடர்ந்து மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்று, பரிசு பெற்ற பென்னாகரம் ஆர்.ஆர்.,ஹள்ளியை சேர்ந்த விவசாயி முருகேசன், பாலக்கோட்டை அடுத்த மூங்கப்பட்டியை சேர்ந்த கந்தன் உள்ளிட்ட, 13 விவசாயிகளை பாராட்டி கேடயமும், விவசாயிகளுக்கு மானிய விலையில், சொட்டுநீர் பாசனம், மருந்து தெளிப்பான் கருவி, மக்காச்சோள விதைகளையும்

அமைச்சர் வழங்கினார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் பாஸ்கர் நன்றி கூறினார்.

### வேளாண் கருவிகள் வாங்க நிதி ஒதுக்கீடு

**தர்மபுரி:** ""தர்மபுரி மாவட்டத்தில், நடப்பாண்டில் வேளாண் கருவிகள் வாங்க, ஒரு கோடியே, 98 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது," கலெக்டர் விவேகானந்தன் தெரிவித்தார்.

தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில், வேளாண் விற்பனை, வணிக மற்றும் வேளாண் பொறியியல் துறை, நபார்டு வங்கி, வேளாண் அறிவியல் மையம் ஆகியவற்றின் சார்பில் நடந்த விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியினை கலெக்டர் விவேகானந்தன் துவக்கி வைத்தார்.

இதில், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையின் சார்பில், அக்மார்க் முத்திரையிடப்பட்ட, மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் உற்பத்திப் பொருட்களை வாங்குதல், வேளாண் வணிகம் மூலம் விவசாயிகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் உற்பத்திப் பொருட்கள், வேளாண் பொறியியல் துறை சார்பில், டிராக்டர், பவர்டில்லர், சொட்டுநீர்ப் பாசனம் உள்ளிட்ட பல்வகை வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள் கண்காட்சியில் இடம்பெற்றன.

தொடர்ந்து, வேளாண் பொறியியல் துறையின் சார்பில், 10 நபர்களுக்கு, 16 லட்ச ரூபாய் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளையும், ஆறு சுய உதவிக்குழுக்களுக்கு, ஒரு லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய் சுழல் நிதியினையும், கலெக்டர் விவேகானந்தன் வழங்கி பேசியதாவது:

முதல்வர் ஜெயலலிதாவின் கொள்கையின்படி, வேளாண் உற்பத்தியை, இரண்டு மடங்காக்கி, விவசாயிகளின் வருமானத்தை, மூன்று மடங்காக உயர்த்திடும் வகையில், தர்மபுரி மாவட்டத்தில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.மேலும், நவீன தொழில் நுட்பங்களையும், பயிற்சிகளையும், நவீன சாகுபடி யுக்திகளையும் பெற்று, பயனடையும் நோக்கில், ஃபிப்ரவரி மாதத்தில், வேளாண்மை வாரம் கடைபிடிக்கப்படுகிறது.கடந்த, 2013-2014ம் ஆண்டுக்கு, வேளாண் இயந்திரங்கள்,

கருவிகள் வழங்க, 198.90 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.
இதுவரை, 471 இதர விவசாயிகளுக்கு, 163.40 லட்ச ரூபாய் மதிப்பிலும், 37 ஹிந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு, 15 லட்ச ரூபாய் மதிப்பிலும், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது.
வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையின் சார்பில், பயிர்குழுக்கள் அமைத்து, பிரபல நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, இடைத்தரகர்கள் இன்றி, லாபகரமான விற்பனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
இவ்வாறு பேசினார்.
எம்.எல்.ஏ., டில்லிபாபு, டி.ஆர்.ஓ., ராமர், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குனர் செல்வம், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் முருகேசன், உதவி செயற்பொறியாளர் பச்சியப்பன், நபார்டு மாவட்ட வளர்ச்சி மேலாளர் பார்த்தசாரதி உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விழுப்புரம் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் 2 இடங்களில் ஏற்படுத்த வேண்டும்**

**உளுந்தூர்பேட்டை, :** விழுப்புரம் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை 2 இடங்களில் ஏற்படுத்த வேண்டும் என அரசுக்கு மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின்

விழுப்புரம் மாவட்ட கமிட்டி கூட்டம் உளுந்தூர்பேட்டையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். மாவட்ட குழு உறுப்பினர்கள் கலியமூர்த்தி, செண்பகவள்ளி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தட்சணாமூர்த்தி வரவேற்றார். கூட்டத்தில் தானே புயல் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவார ணம் வழங்க வேண்டும். விவசாய விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க விழுப்புரம் மாவட்டம் முழுவதும் தாலுகா அளவில் இரண்டு இடங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற இன்று முதல் 20ம்தேதி வரையில் மாவட்டம் முழுவதும் பிரசார இயக்கம் நடத்துவது. விழுப்புரம் மாவட்டத்தில் குடிமனை பட்டா, அரசு விலையில்லா பொருட்கள் அனைத்தும் வருகிற நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் வழங்கிட வேண்டும். முதியோர், விதவை, திருமண உதவித் தொகை உள்ளிட்ட மாதக்கணக்கில் பணம் வழங்காததை கண்டித்து மார்ச் 8ம் தேதி ஊராட்சி அள வில் தர்ணா போராட்டம் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் ஒன்றிய நிர்வாகிகள் கணேசன், ஏழுமலை, சுசீலா, சக்தி, கண்ணம்மாள், லோகநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**வேளாண் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான கருத்தரங்கம்**

**கோவை, :** கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக இளநிலை வேளாண் மாணவர்களால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான ‘அக்ரோநோவா 14‘ எனும் கருத்தரங்கம் துவக்க விழா நேற்று நடந்தது. பல்கலைக்கழக வளாகத்தில் இரண்டு நாட்கள் நடக்கும் இந்த கருத்தரங்கில் 200க்கும் மேற்பட்ட மாணவ -மாணவிகள் கலந்து கொண்டுள்ளனர். பல்கலைக்கழக துணை வேந்தர் ராமசாமி துவக்கிவைத்து பேசியதாவது: இந்தியா அறிவாற்றல் மிக்க நாடு, 37 சதவீதம் படித்த மாணவர்களுக்கு இந்தியாவில் வேலை வாய்ப்பு உள்ளது. இந்தியத் தொழில்நுட்ப வல்லுநர்கள் உலகெங்கும் 70

க்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றி வருகின்றனர். மேலும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களில் 74 சதவீதம் பெண்கள் தான். இந்தியாவில் பெண்கள் அலுவலகங்களில் மட்டுமின்றி வீட்டு வேலைகளிலும் பெரும்பான்மை பங்கு வகிக்கின்றனர். ஆண்களின் மனப்போக்கு மாறி வீட்டு வேலைகளிலும் பங்கு எடுக்க வேண்டும். மாணவர்களும் பாலின பேதமின்றி வீட்டு வேலைகளில் பங்கேற்க வேண்டும். மேலும் புதுமையாக யோசித்து தங்கள் திறமைகளை வெளிக்காட்டினால் தகுதிக்கேற்ற வேலை வாய்ப்பினை பெற முடியும். இவ்வாறு துணைவேந்தர் பேசினார்.

பின்னர் மகிமைராஜா, முதன்மையர் (வேளாண்மை) பேசுகையில், 'பள்ளி மாணவர்களின் பல்வேறு திறமைகளான பேச்சாற்றல், நினைவாற்றல், கட்டுரை மற்றும் ஓவியம் போன்றவற்றை வெளிக்கொணர்ந்து அவர்களை ஊக்கப்படுத்துவதே இவ்விழாவின் நோக்கம்' என்றார். இந்த கருத்தங்கில் வேளாண்மையில் புதிய தொழில் நுட்பங்கள் என்ற தலைப்பிலான மாதிரிக் கண்காட்சி, நம் நாட்டு பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் தாவரங்களின் கண்காட்சி இடம்பெற்றிருந்தன. மேலும் உலக அரங்கில் இந்திய விவசாயி என்ற தலைப்பில் கட்டுரை போட்டி நடந்தது.

இன்று கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகள் நடக்கிறது.

## விதை விற்பனை உரிமம் பெறாமல் நர்சரியில் நாற்று விற்றால் நடவடிக்கை

**கோவை, :**கோவை மாவட்டத்தில் உள்ள நர்சரிகள் நாற்றுகள் விற்பனை செய்ய விதை விற்பனை உரிமம் பெற வேண்டும் என்று விதை ஆய்வு துணை இயக்குநர் பொன்னுச்சாமி தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் கூறியுள்ளதாவது:கோவை மாவட்டத்தில் அலங்கார செடிகள் விற்பனை செய்யும் நர்சரிகள் ஏராளமாக உள்ளன. இத்தகைய நாற்று பண்ணைகளில் தென்னை, பழமரக்கன்றுகள் மற்றும் காய்கறி நாற்றுக்களும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அங்கு நாற்றுக்களை விற்பனை செய்யும்போது கோவை விதை ஆய்வு துணை இயக்குநரிடம் விதை விற்பனை உரிமம் பெற வேண்டும். விதை விற்பனை உரிமம் பெறாமல் விற்பனை

செய்தால் விதை கட்டுப்பாடு ஆணை 1983 மற்றும் விதை சட்டம் 1966ன் படி தண்டனைக்குரிய குற்றமாகும். சட்டத்தை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் விபரங்களுக்கு விதை ஆய்வு துணை இயக்குநர், 1424 ஏ, தடாகம் சாலை, ஜிசிடி, கோவை-13ல் உள்ள அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.இத்தகவலை கோவை விதை ஆய்வு துணை இயக்குநர் பொன்னுச்சாமி தெரிவித்துள்ளார்.

**முருங்கைக்காய் கிலோ ரூ60க்கு விற்பனை**

**போச்சம்பள்ளி, :**போச்சம்பள்ளியில் ஒரு கிலோ முருங்கை காய் 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது, வரத்து அதிகரித்துள்ளதால் கிலோ 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் விவசாயிகள் முருங்கை சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், போதிய மழை இல்லாததால் மரங்களில் பூ பிடிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதனால், சந்தைக்கு வரத்து சரிந்ததால், விலை உயர்ந்தது. கடந்த வாரம் ஒரு கிலோ முருங்கை காய் 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, வரத்து அதிகரித்துள்ளது. மரத்தில் கொத்து கொத்தாக காய்த்து தொங்கிய பிஞ்சுகள் காயாகி அறுவடைக்கு வந்துள்ளதால் கிலோவிற்கு ரூ40 குறைந்து ரூ60க்கு விற்பனை செய்யப்படுகிறது.இன்னும் 10 அல்லது 15 நாட்களில் முருங்கை காய் வரத்து மேலும் அதிகரிக்கும். அப்போது, விலை சற்று குறைய வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**சுக்காலியூர், கட்டளையில் மேலும் 2 நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு விவசாயிகள் பயன்பெறலாம்**

**கரூர், :** விவசாயிகள் நெல் கொள்முதல் செய்ய கரூர் மாவட்டத்தில் மேலும் கூடுதலாக 2 நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக கலெக்டர்

தெரிவித்துள்ளார்.கரூர் கலெக்டர் ஜெயந்தி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:
கரூர் மாவட்டத்தில் 2014 காரீப் கொள்முதல் பருவத்தில் விளைந்துள்ள நெல்லினை கொள்முதல் செய்வதற்கு வசதியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. கரூர் வட்டத்தில் பள்ளபாளையம், அரவக்குறிச்சி வட்டத்தில் சின்னதாராபுரம், குளித்தலை வட்டத்தில் நங்கவரம் மற்றும் நச்சலூர், கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் கோவக்குளம் மற்றும் பஞ்சப்பட்டி என மாவட்டத்தில் மொத்தம் 6 நேரடி கொள்முதல் நிலையங்கள் பிப்ரவரி 1ம்தேதி முதல் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்நிலையில், விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று கரூர் வட்டத்தில் சுக்காலியூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் கட்டளை ஆகிய 2 இடங்களில் கூடுதலாக நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், நேரடி கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத்தொகையும் சேர்த்து நெல் கிரேடு ஏ ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு (ஊக்கத்தொகை ரூ70 உட்பட) ரூ.1,415ம், பொது ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு (ஊக்கத்தொகை ரூ.50 உட்பட) ரூ.1,360ம் வழங்கப்படும். நெல் கொள்முதல் செய்யும் இடத்தில் 17 சதவீதம் ஈரப்பதத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ள திரிபுகளுக்கு மிகாமல் உள்ள நெல் கொள்முதல் செய்யப்படும். எனவே, இந்த வாய்ப்பினை பயன்படுத்தி இந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைந்த நெல்லினை குறிப்பிட்ட நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடையலாம் என்று கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வேளாண் கல்விச் சுற்றுலா**

**கறம்பக்குடி, :** கறம்பக்குடி வட்டார வேளாண்மையின் சார்பாக கல்விச் சுற்றுலா நடைபெற்றது. கறம்பக்குடி வட்டார வேளாண் மையத்தின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கல்விச்சுற்றுலா நடைபெற்றது. இந்த கல்விச்சுற்றுலாவை கறம்பக்குடி ஒன்றிய ஆத்மா திட்ட சேர்மன் பச்சைக்குட்டி கொடியசைத்து துவக்கி வைத்தார். வட்டார வேளாண் உதவி இயக்குநர்

மனோகரன் முன்னிலை வகித்தார். 2013-14ம் ஆண்டிற்கான ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகள் கல்விச்சுற்றுலாவில் வட்டாரத்தில் உள்ள 50 விவசாயிகள் தஞ்சை மாவட்டம் ஆடுதுறையில் நடைபெற்ற மண்டல விவசாய கருத்தரங்கிற்கு சென்று நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த கருத்துக்களையும், அங்கு நடந்த கண்காட்சிகளையும் பார்வையிட்டு பலன் பெற்றனர். விவசாயிகள் வேளாண் கல்வி சுற்றுலா பயன் உள்ளதாக இருந்தன என கூறினர்.

இந்த கல்விச்சுற்றுலா ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரியகுமார் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பால்சாமி ஆகியோர் செய்திருந்தனர்.

**மிளகாய் பயிருக்கு இன்சூரன்ஸ் செய்ய பிப்.28 கடைசி நாள்**

**கமுதி, :** மிளகாய் பயிருக்கு இன்சூரன்ஸ் செய்ய பிப்.28 கடைசி நாள் என தோட்டக்கலை துறை அறிவித்துள்ளது.

கமுதி அருகே கூலிபட்டி கிராமத்தில் அட்மா திட்ட த்தின் கீழ் வேளாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கமுதி தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் ஆறுமுகம் வரவேற்றார். ராமநாதபுரம் தோட்டக்கலை அலுவலர் (பொ) கோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். கமுதி தோட்டக்கலை துறை துணை மேலாண்மை அலு வலர் பழனிச்சாமி நன்றி கூறினார். மாவட்ட தோட்டக் கலை துறை துணை இயக்கு நர் கங்காதரன் தலைமை வகித்து பேசுகையில், “ராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த ஆண்டு மிளகாய் பயிருட்டுள்ள விவசாயிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அல்லது பொது இன்சூரன்ஸ் நிறுவனங்களில் ஏக்கருக்கு ரூ.437.20 பிரீமியம் தொகை செலுத்தி காப்பீடு செய்து கொள்ள வேண்டும்.மிளகாய் பயிருக்கு காப் பீடு செய்ய பிப்.28 கடைசி நாள். சொட்டுநீர் பாசனம் அமைத்து மிளகாய் மற்றும்

காய்கறிகள் சாகுபடி செய் யலாம்.சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க 100 சத வீத மானியம் வழங்கப் படும். மற்ற விவசாயிகளு க்கு 75 சதவீதம் மானியம் வழங்கப்படும். இதனை விசயாயிகள் நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும்" என்றார். வேளாண் வணிகத் துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு மானிய விவரங்கள், மிளகாய் சாகுபடியில் கடைபிடிக்க வே ண்டிய தொழில்நுட்பங்கள், தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.இதில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**உற்பத்தியை பெருக்கினால் மட்டும் சாதனை என்று கூற முடியாது**

**விருத்தாசலம், :** விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் முந்திரி சாகுபடி கருத்தரங்கு நடந்தது.

ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் இயக்குநர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சந்திரமோகன் முன்னிலை வகித் தார். மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் புருஷோத்தமன் வரவேற்றார்.

கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக்கழக வாசனை மற்றும் மலைத் தோட்டப்பயிர்கள் துறை பேராசிரியர் ஜான்சிராணி, தோட்டக்கலை துணை இயக்குநர் ராமலிங்கம், மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ஜீவா ஆகியோர் கலந்து கொண்டு முந்திரி சாகுபடி குறித்து விளக்கி பேசினார்கள்.

இதில், முந்திரி உற்பத்தியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த குறிப்பேட்டை ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ராஜேந்திரன்

வெளியிட்டு பேசும் போது, விவசாயத்தில் உற்பத்தியை பெருக்கினால் மட்டும் சாதனை என்று கூற முடியாது. விவசாயிகளின் வாழ்வாதாரம் நன்றாக இருத்தல் வேண்டும். நாடு வேளாண் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதுடன், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும். முந்திரியை பொறுத்த வரையில் அதன் ஒவ்வொரு பாகத்திற்கும் மதிப்புகள் உள்ளது. விவசாயிகள் அதை முறையாக சந்தைப்படுத்தி, உரிய லாபத்தை அடைய வேண்டும். புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்க்கையில் உற்பத்தியில் நாம் பின் தங்கி உள்ளோம். கடலூர் மாவட்டம் முந்திரி பயிர் செய்ய வாய்ப்புள்ள மாவட்டமாகும், எனவே, அதிகளவில் சாகு படி செய்து உற்பத்தியை பெருக செய்யலாம். அதோடு தற்போது நிலவும் தண்ணீர் தட்டுப்பாட்டிற்கு குறைந்த தண்ணீர் தேவையுடைய முந்திரியை விவசாயிகள் பயன்படுத்தலாம், என்றார்.

**இறைச்சி கூடங்களை நவீனப்படுத்த மானியம்**

**விருத்தாசலம், :** கடலூர் மாவட்ட வேளாண்மை (வேளாண் வணிகம்) துணை இயக்குநர் கோமதி, விருத்தாசலம் கோட்ட வேளாண்மை அலுவலர் அமுதா ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு அரசு மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இணைந்து தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் கீழ் இறைச்சி கூடங்களை நவீனப்படுத்த மானியங்கள் வழங்கப்பட இருக்கிறது. மாவட்டத்தில் உள்ள இறைச்சி கூடங்களை ஒட்டு மொத்த சுகாதார அடிப்படையில் மேம்படுத்தி அதற்கு தேவையான கட்டமைப்புகள் மற்றும் கருவிகள் வழங்கப்பட இருக்கிறது. இதன் மூலமாக நுகர்வோர்களுக்கு ஆரோக்கியமான முறையில் இறைச்சி வழங்கிட

முடியும். இதற்கென ரூ. 5 லட்சம் வரையில் மானியம் வழங்கப்பட இருக்கிறது. இதை பெற விரும்புபவர்கள் மாநில உணவு பதப்படுத்தும் இயக்கத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளிடம் பெறப்பட்ட உரிமம், இறைச்சி கூட உரிமையாளருக்கான ஆதாரம், மின்சாரம், குடிநீர் வசதி உள்ளிட்டவைகள் குறித்து தெரியப்படுத்திட வேண்டும். இது குறித்து மேலும் தகவல்களை பெற கடலூர் சுப்ராயலு நகரில் உள்ள வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன் பெறலாம்.

**தனியாருக்கு நெல் விற்பனை கொள்முதல் நிலையங்கள் மூடல்**



**கடலூர் :** மாநில அரசு நெல்லுக்கு உரிய ஊக்கத்தொகை வழங்காததால் கடலூர் மாவட்டத்தில் நெல்கொள்முதல் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது.இந்த ஆண்டு கடலூர் மாவட்டத்தில் 2 லட்சத்து 53 ஆயிரம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்பட்டுள்ளது. ஆந்திர ரகமான பி.பி.டி நெல்லுக்கு நல்ல விலை கிடைப்பதால், இந்த ரகம் அதிகமாக சாகுபடி செய்யப்பட்டது. தற்போது, அறுவடை பணிகள் நடந்து வருகின்றன.இதனால், கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கடந்த ஜனவரி 20ம் தேதி வரை

67 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இந்நிலையில், நடப்பு ஆண்டில் 56 ஆயிரம் மெட்ரிக் டன் நெல்கொள்முதல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரை 14 ஆயிரத்து 718 மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் நடைபெற்றுள்ளது. மேலும் நெல் வரத்து அடியோடு நின்றுவிட்டதால் இந்த மாவட்டத்தில் 16 நெல் கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ‘முதல் ரக நெல்லுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.14.15ம், பொது ரகத்திற்கு ரூ.13.60ம் அரசு நிர்ணயித்துள்ளது. கடலூர் மாவட்டத்தில் 80 சதவீதம் அளவுக்கு பயிரிடப்பட்டுள்ள ஆந்திர பி.பி.டி ரக நெல்லை கிலோ ரூ.16க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.மேலும், அரசு கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் லோடுமேன்கள் பணம் கேட்பது, ஈரப்பதம் என கூறி அலைக்கழிப்பது போன்ற காரணங்களால் அரசு நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்க விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர்.பிபிடி அல்லாத நெல்லையும் அறுவடை செய்யும் இடத்திற்கே வியாபாரிகள் நேரில் சென்று கிலோ ரூ.13.60 க்கு கொள்முதல் செய்துவருகின்றனர். இதனால், அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசாங்கம் கூடுதல் விலை கொடுத்து நெல் கொள்முதல் செய்ய வேண்டும்‘ என்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பயிர்களைத் தாக்கும் பூச்சி, நோய்களால் ஆண்டுக்கு ரூ.50,000 கோடி இழப்பு



**புதுடெல்லி,**

பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களால் ஆண்டுக்கு ரூ.50,000 கோடி அளவிற்கு இழப்பு ஏற்படுவதாக அசோசெம் மற்றும் யெஸ் பேங்க் கூட்டு ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>பூச்சி மருந்து உபயோகம்</u>

இந்திய விவசாயிகள் வயல்களில் பூச்சி மருந்துகளை சரிவர பயன்படுத்துவதில்லை. இதனால் பயிர்கள் பூச்சித்தாக்குதலுக்கு அதிகம் இலக்காவதாக கண்டறியப்பட்டுள்ளது. சர்வதேச சராசரி பயன்பாட்டுடன் ஒப்பிடும்போது நம் நாட்டில் பூச்சி மருந்து உபயோகம் இரண்டு சதவீதம் குறைவாக உள்ளது. மேலும் 18 கோடி ஹெக்டேர் விளைநிலத்தில் சுமார் 25 சதவீத நிலங்களில்தான் பூச்சி மருந்துகள் முறையாகப் பயன்படுத்தப்படுவதாக தெரிய வந்துள்ளது.ஆந்திரா, அரியானா, கர்நாடகா, மகாராஷ்டிரா, பஞ்சாப் மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் பூச்சி மருந்துகள் அதிகம்

உபயோகிக்கப்படுகின்றன. கேரளா, ஒடிசா, பீகார் ஆகிய மாநிலங்களில் பூச்சி மருந்து பயன்பாடு குறைவாக உள்ளது. இந்த மாநிலங்களில் பாகப்பிரிவினை போன்ற காரணங்களால் விளைநிலங்கள் அதிகம் துண்டாடப்பட்டிருப்பதும், விவசாயிகளின் வாங்கும் சக்தி மிகவும் குறைவாக இருப்பதுமே இதற்கு காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

காய்கறி–பழங்கள்

ஆய்வறிக்கையை வெளியிட்டுப் பேசிய அசோசெம் தலைவர் ரானா கபூர், ‘‘புதிய ரக பருத்தி, காய்கறி மற்றும் பழங்கள் அதிகம் சாகுபடி செய்யப்படுவதால் எதிர்காலத்தில் களைக்கொல்லிகளுக்கும், பூஞ்சைக்கொல்லிகளுக்கும் தேவைப்பாடு அதிகமாக இருக்கும். இதனால் பூச்சி மருந்து தயாரிப்பு துறை வளர்ச்சி அடையும்’’ என்று தெரிவித்தார். தற்போது இத்துறையின் வருவாய் ஆண்டுக்கு ரூ.17,000 கோடி அளவிற்கு உள்ளது. மேலும் ஆண்டுக்கு சராசரியாக 15 சதவீத வளர்ச்சி கண்டு வருகிறது.

**மீன் பிடித்தபோது படகு கவிழ்ந்து மரணமடைந்த மீனவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.1 லட்சம் ஜெயலலிதா அறிவிப்பு**



**சென்னை,**

முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

கடந்த ஜனவரி 4–ந்தேதியன்று கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கீழகடியப்பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த அல்லேசியின் மகன் சூசை கடலில் சிப்பி எடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது கட்டுமரம் கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிர் இழந்தார்.

ஜனவரி 18–ந்தேதி நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைப்பேட்டையைச்சேர்ந்த கருப்புக்கண்ணுவின் மகன் ராஜமாணிக்கம்; ஜனவரி 20–ந்தேதி கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சிலம்பிமங்கலம் மதுரா, சாமியார்பேட்டையைச் சேர்ந்த பக்கிரியின் மகன் சுப்பராயன் ஆகியோர் கடலில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிர் இழந்தனர்.

இவர்களின் குடும்பங்களுக்கு முதல்–அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 லட்சம் வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஆந்திராவில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 3,596 டன் புழுங்கல் அரிசி தஞ்சை வந்தது**



**தஞ்சாவூர், -**

ஆந்திராவில் இருந்து சரக்குரெயில் மூலம் 3,596 டன் புழுங்கல் அரிசி தஞ்சைக்கு வந்தது.

புழுங்கல் அரிசி

தமிழகத்தில் பொதுவினியோகத்திட்டத்தின் கீழ் நியாயவிலைக்கடைகளின் மூலம் புழுங்கல்அரிசி, பச்சரிசி, கோதுமை, சர்க்கரை, மண்எண்ணை போன்றவை பொதுமக்களுக்கு இலவசமாகவும், குறைந்தவிலையிலும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அத்தியாவசியப்பொருட்கள் மத்தியதொகுப்பில் இருந்து தமிழகத்திற்கு வழங்கப்படுகிறது. அரிசி, கோதுமை, மண்எண்ணை போன்றவற்றை பொதுமக்கள் வாங்கி செல்வதற்கு வசதியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடும்பஅட்டை வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஆந்திரா மாநிலம் நல்கொண்டா பகுதியில் இருந்து மத்தியதொகுப்பு மூலம் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் ஏற்றப்பட்டு தஞ்சைக்கு அனுப்பப்பட்டன. அந்த சரக்குரெயில் தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்றுகாலை வந்தடைந்தது.

3,596 டன்

மொத்தம் 58 வேகன்களில் 3,596 டன் புழுங்கல் அரிசி வந்திருந்தது. பின்பு சரக்குரெயிலில் இருந்து அரிசி மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை பழைய வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியில் உள்ள மத்திய சேமிப்பு கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டன.

இங்கிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் கீழ் தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள நியாயவிலைக்கடைகளுக்கு அரிசி கொண்டு செல்லப்பட்டு பொதுமக்களுக்கு வினியோகம் செய்யப்படும்.

## தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேடு செய்த 10 பேர் பணி நீக்கம்



**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேடு செய்த 10 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர்.

நெல்கொள்முதல்

தஞ்சை மாவட்டத்தில் சம்பா அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதனால் கொள்முதல் பணிகளும் முடுக்கி விடப்பட்டு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் நெல்கொள்முதல் நிலையங்களில் முறைகேடு நடப்பதாக வந்த புகாரைத்தொடர்ந்து தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க தஞ்சை மண்டல நுகர்பொருள் வாணிப கழக மேலாளருக்கு உத்தரவிட்டார். அதன் பேரில் முறைகேடு செய்ததாக 10 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர்.

1½ லட்சம் டன்

இது குறித்து நுகர்பொருள் வாணிப கழக மண்டல முதுநிலை மேலாளர் முகமதுபாஷா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தஞ்சை மாவட்டத்தில் 394 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் 8 சிறப்பு நடமாடும் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் திறக்கப்பட்டு இதுவரை 1 லட்சத்து 58 ஆயிரத்து 950 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. மேலும் கொள்முதல் நிலையங்களில் எந்தவித புகார் மற்றும் குறைபாடு இல்லாமல் பணிபுரிய அனைத்து பணியாளர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது.

## 10 பேர் பணி நீக்கம்

அவ்வப்போது ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கொள்முதல் நிலையங்களில் கண்டறியப்படும் முறைகேடுகள் தொடர்பாக முதுநிலை மண்டல மேலாளர் கடுமையான நடவடிக்கை எடுத்து உள்ளார் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு 10 பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். மேலும் சென்னை தலைமை அலுவலக கண்காணிப்பு குழுவும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறது.

கொள்முதல் நிலையங்களில் ஏற்படும் குறைகள் தொடர்பான புகார்களை தஞ்சை 9344704615, கும்பகோணம் 9976788168, பட்டுக்கோட்டை 9965340907 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

**திருவாரூர் மாவட்டத்தில் உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உர மானியம் கலெக்டர் நடராசன் தகவல்**



**மன்னார்குடி, -**

திருவாரூர் மாவட்டத்தில் உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கப்படும் என்று கலெக்டர் நடராசன் கூறினார்.

<u>கருத்தரங்கம்</u>

திருவாரூர் மாவட்டம் மன் னார்குடி அருகே வேளுக்குடி கிராமத்தில் வேளாண்மைத் துறை மற்றும் கிரிப்கோ உர நிறுவனம் சார்பில் பயிர் சாகுபடி, திரவ உயிர் உரங்கள் தொடர்பான கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கை திருவாரூர் கலெக்டர் நட ராசன் தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

<u>உரமானியம்</u>

திருவாரூர் மாவட்டத்தில் நெல் அறுவடை முடிந்த வயல்களில் உளுந்து, பயறு வகை பயிர்களை பயிர் செய்ய வேளாண்மை துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், தேசிய வேளாண்மை விதை திட்டம் ஆகியவற்றின் கீழ் உளுந்து, பாசிப்பயிறு சாகு படி செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.200 மானியத்தில் டி.ஏ.பி. உரம் வழங்கப்பட உள்ளது.

விவசாய பணிகளில் பெண் கள் முக்கிய பங்கு வகிக் கின்றனர். எனவே பயறு வகை பயிர் சாகுபடி செய்ய மகளிர் சுய உதவிக்குழுவினர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் பெண்கள் தொழில் முனை வோராக உருவாக வழி வகை செய்யப்பட்டுள்ளது.

முக்கிய தொழில்நுட்பம்

பயறு வகை பயிர்களுக்கு இலைவழி உரமிடுவது ஒரு முக்கிய தொழில்நுட்பமாகும். வேளுக்குடி பகுதியில் பயறு வகை பயிர் செய்ய நீடா மங்கலம் வேளாண்மை அறிவி யல் மையத்தில் பூம்ஸ்ப்ரே கருவி வேளாண்மைத்துறை மூலம் கட்டணம் இன்றி வழங் கப்படும். இந்த கருவியை கொண்டு பயிர்களில் நீர் மேலாண்மை மற்றும் உரக் கரைசலை எளிதாக தெளிக்க முடியும்.

நைட்ரஜன் சத்து

பயறு வகை பயிரினை பயிர் செய்வதன் மூலம் நிலத்திற்கு நைட்ரஜன் சத்து அதிக அள வில் கிடைக்கும். இதனால் அடுத்து நெல்பயிர் சாகுபடி செய்யும்போது மகசூல் அதி கம் கிடைக்கும். எனவே விவ சாயிகள் சம்பா, தாளடி சாகு படிக்கு பின் உளுந்து, பாசிப் பயறு வகை பயிர்களை பயி ரிட்டு பலன் அடைய வேண் டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கருத்தரங்கில் வேளாண்மை இணை இயக்குனர் வேளாண்மை தனசேகரன், துணை இயக்குனர் மயில் வாகனன், கூட்டுறவு சங்க துணை பதிவாளர் சத்திய மூர்த்தி, ஒன்றியக்குழு உறுப்பி னர் ராஜசேகர், ஊராட்சி மன்ற தலைவர்கள் முருகேசன், ராமதாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**ஆயிரம் அடிக்கு மேல் ஆழ்துளை கிணறு அமைக்கப்படும் நிலை நீரோட்டம் பார்ப்பதில் விவசாயிகள் ஆர்வம்**

**கோபால்பட்டி,**

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஆயிரம் அடிக்கு மேல் ஆழ்துளை கிணறு அமைக்கப்படும் நிலை உருவாகி உள்ளது. இதனால் நிலங்களில் நீரோட்டம் பார்ப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆழ்துளை கிணறுகள்

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை இல்லாததால் அனைத்து குளங்களும் வறண்டு கிடக்கின்றன. அதில் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து விட்டதால் தென்னை, மா விவசாய சாகுபடி பாதிக்கப்பட்டு உள்ளது.

இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விவசாய நிலங்களில் 200, 300 அடிக்குள் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு வந்தன. தற்போது ஆயிரம் அடிக்கு மேல் ஆழ்துளை கிணறுகள் அமைக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் புதிய ஆழ்துளை கிணறுகள் அமைப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்காக நீரோட்டம் இருக்கும் பகுதியை ஆய்வு செய்து வருகின்றனர். இதனால் அந்த பகுதியில் நிலத்தடி நீரோட்டம் பார்ப்பவர்களுக்கு தனி மவுசு ஏற்பட்டு உள்ளது.

நீரோட்டம்

நீரோட்டம் பார்ப்பவர்கள் கயிறுகளில் இரும்பை கட்டிக்கொண்டு தோட்டங்களை சுற்றி வருகின்றனர். எந்த இடத்தில் அந்த இரும்பு வேகமாக சுழலுகிறதோ அந்த இடத்தில் நீரோட்டம் அதிகம் இருப்பதாக கூறுகிறார்கள். இன்னும் சிலர் உள்ளங்கையில் தேங்காயை வைத்துக் கொண்டு கூலாங்கற்கள், தண்ணீர்க்குடம் ஆகியவற்றை வைத்து நீரோட்டம் பார்க்கிறார்கள். இதற்காக நீரோட்டம்

பார்ப்பவர்களை தங்கள் நிலத்திற்கு அழைத்து செல்ல விவசாயிகள் காத்து கிடக்கவேண்டிய நிலை உருவாகி உள்ளது. நீரோட்டம் பார்ப்பவர்கள் கூறும் இடத்தில் விவசாயிகள் நம்பிக்கை வைத்து ஆழ்துளை கிணறை அமைத்து வருகின்றனர்.

இந்த நீரோட்டம் பார்ப்பதில் 90 சதவீதம் சரியாக அமைகிறது. நீரோட்டம் பார்ப்பதற்கு ரூ.500 முதல் ரூ.2 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இன்னும் சிலர் தங்கள் நிலத்தில் எந்த இடத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கலாம். அதை எந்த தேதியில் பணி தொடங்கலாம் என்பது குறித்து ஜோசியரிடம் கலந்து ஆலோசனை செய்து வருகின்றனர்.

கோடைமழை

இந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஆயிரம் அடிக்கு மேல் ஆழ்துளை கிணறு அமைத்த, சில இடங்களில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டு உள்ளது. வசதி படைத்த விவசாயிகள் ஏராளமான பணம் செலவு செய்து ஆழ்துளை கிணறு அமைக்கின்றனர். ஆனால் போதிய பணம் இல்லாத ஏழை விவசாயிகள் கோடைமழை பெய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றனர்.

**விவசாயிகளுக்கு நவீன வேளாண் கருவிகள்**

**தென்திருப்பேரை,**

தென்திருப்பேரையில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு நவீன வேளாண் கருவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. ஆழ்வார்திருநகரி யூனியன் தலைவர் க.விஜயகுமார், நிலத்தில் உழுவதற்கு பயன்படும் நவீன சுழல் கலப்பையை (ரோட்டோவேட்டர் கருவி) 2 விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கினார். ரூ.82 ஆயிரம் மதிப்பிலான ரோட்டோவேட்டர் கருவியானது விவசாயிகளுக்கு மானியமாக ரூ.52 ஆயிரத்துக்கு வழங்கப்பட்டது. வட்டார வளர்ச்சி அலுவலர் அரவிந்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### இயற்கைவிவசாயத்தைஊக்குவிக்கசலுகைகள்-

### கர்நாடகாவில்குறைந்தவட்டியில்கடன், விவசாயகடன்தள்ளுபடி



கர்நாடகத்தில்இயற்கைவிவசாயத்தைஊக்குவிக்கும்வகையில்விவசாயிகளுக்குஅதிகப்படியானகடன்மற்றும்கடன்தள்ளுபடிஉள்படபல்வேறுசலுகைகள்வழங்கப்படும் என்றுமாநிலஅரசுதெரிவித்துள்ளது.

பெங்களூரில்புதிதாகதொடங்கப்பட்டுள்ளஇயற்கைவிவசாய விளைபொருள்விற்பனைநிலையத்தைபிரபலப்படுத்தும்வகையில்இயற்கைவேளாண்கண்காட்சிவெள்ளிக்கிழமைதொடங்கியது.ஞாயிறுவரைநடைபெறும்இக்கண்காட்சியைப்பார்வையிட்டவேளாண்துறைஅமைச்சர்கிருஷ்ணபைரேகவுடாகூறியதாவது:நாடுமுழுவதும்இயற்கைவிவசாயம்நடைபெறும்மாநிலங்கள்வரிசையில்கர்நாடகம்முன்னிலையில்இருக்கிறது.மாநிலஅரசு, விவசாயப்பல்கலைக்கழகங்கள், தன்னார்வதொண்டுநிறுவனங்கள்ஆகியவைஇயற்கைவிவசாயத்தின்மேன்மையைதொடர்ந்துவிவசாயிகள்மத்தியில்கொண்டுசென்றதால்தான்இந்தமாற்றம்ஏற்பட்டி

ருக்கிறது.இனிவரும்காலங்களிலும்இயற்கைவிவசாயத்தைஊக்குவிக்கும்வகையில் பல்வேறுபுதியதிட்டங்கள்அறிமுகப்படுத்தப்படும்.

இதன்படிபெங்களூர், மைசூரைத்தொடர்ந்துமற்ற6 நகரங்களில்இந்தஆண்டில்இயற்கைவேளாண்விளைபொருள்விற்பனைநிலையங்கள்தொடங்கப்படும். இதற்காக, மத்தியஅரசுரூ.24 கோடியும்மாநிலஅரசுரூ.36 கோடியும்நிதிஒதுக்கிஉள்ளது.செயற்கைஉரங்களால்விளைவித்தவிளைபொருள்களைக்காட்டிலும், இயற்கைவிவசாயத்தில்விளைந்தவிளைபொருள்களில்தான்கூடுதல்ஊட்டச்சத்துஇருக்கும்.இயற்கைவிவசாயமேமண்ணுக்கும்மக்களுக்கும்உகந்தது.

எதிர்காலசந்ததியினர்வளமுடனும்நலமுடனும்வாழவேண்டுமென்றால்இயற்கைவிவசாயத்தின்மூலம்உற்பத்திசெய்யப்பட்டஉணவுவகைகளையேஉட்கொள்ளவேண்டும்.இதுகுறித்தவிழிப்புணர்வைபொதுமக்களிடம்தொடர்ந்துஏற்படுத்தவேண்டும்.

கர்நாடகாவில்இயற்கைவிவசாயத்தைஊக்குவிக்கும்வகையில், இயற்கைவிவசாயிகளுக்குகுறைந்தவட்டியில்அதிககடன், குறிப்பிடஅளவிலானவிவசாயகடன்தள்ளுபடிஉள்ளிட்டசலுகைகளைவழங்கஅரசுமுடிவுசெய்துள்ளதுஎன்றார்.